நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No.362/2025**

**P.W. 4 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சதிஷ் |
| தந்தை / கணவர் பெயர் | : | செங்கோட்டையன் |
| கிராமம் | : | இ.எஸ்.ஐ. மருத்துவமனை அருகில் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 4** |
| வயது | : | 33 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2025–ஆம் வருடம், ஆகஸ்ட் மாதம், 07–ம்ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜரில் இல்லை அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.17PM)

1. நான் தற்போது மேட்டுரில் குடியிருக்கிறேன். நான் வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா1 எனது வீட்டிற்கு அருகில் குடியிருக்கிறார். சம்பவம் நடந்து அன்று நான்வேலை சம்பந்தமாக வெளியூர் சென்று விட்டேன். அ.சா1யை யார் அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

1. அ.சா1ன் கணவர் பெயர் ரங்கசாமி என்றால் சரிதான். அ.சா1க்கும் அவரது கணவருக்கும் பிரச்சினை ஏற்பட்டு இருவரும் பிரிந்து தான் வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரிதான். அ.சா1ன் அப்பா பெயர் ராஜேந்திரன் என்றால் சரிதான். சம்பவம் நடந்து அன்று நான் அ.சா1ன் வீட்டின் அருகே நின்று கொண்டிருந்தபோது இந்த வழக்கின் எதிரி அ.சா1யை தன்னுடன் சேர்ந்து வாழ கேட்டதாகவும் அதற்கு அ.சா1 மறுப்பு தெரிவித்தபோது அ.சா1யை எதிரி கெட்ட வார்த்தையால் திட்டி அவருடையை தலை முடியை பிடித்து இழுத்து தலையிலும், முதுகிலும் அடித்தும் அவருடைய கழுத்தில் எதிரி நகத்தால் கீறியதை நான் நேரில் பார்த்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சம்பவத்து அன்று நான் என்னுடைய வேலை சம்பந்தமாக வெளியூர் சென்று விட்டதால் சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது நான் சம்பவத்தை பார்க்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.24PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**